


தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.5.2025) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து வீரர், வீராங்கனைகளுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஆகியோர் உடன் உள்ளனர்.




சென்னை, கிண்டி அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில், நேற்று முன்தினம் (13.05.2025) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி. வெ.கணேசன் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 174 நபர்களுக்கு, கருணை அடிப்படையில் 7 நபர்களுக்கு, பணி நியமன ஆணைகள் வழங்கி, 2023-2024 ஆண்டில் சிறப்பாக பணிபுரிந்த 12 ஆசிரியர்களுக்கு டாக்டர் ராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் விருதுகளையும் வழங்கினார். இந்நிகழ்வில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அரசு செயலாளர் கொ.வீர ராகவ ராவ், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் பா.விஷ்ணு சந்திரன், கூடுதல் இயக்குநர் தி.இராஜசேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## திருப்பத்தூர் மாவட்டம்

# ஆலங்காயம் கிழக்கு, ஆலங்காயம் மத்திய, ஆலங்காயம் மேற்கு - திருப்பத்தூர் கிழக்கு, திருப்பத்தூர் வடக்கு, திருப்பத்தூர் மேற்கு, திருப்பத்தூர் தெற்கு, கந்திலி தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் மற்றும் வாணியம்பாடி கிழக்கு, மேற்கு - ஆம்பூர் மேற்கு, கிழக்கு ஆகிய நகரங்களில் அடங்கியுள்ள வார்டுகள் விவரம் பிரிக்கப்பட்ட ஒன்றிய, நகரக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் - அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் - தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **"தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு"** ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் திருப்பத்தூர் மாவட்டத்திற்குட்பட்ட, ஆலங்காயம் கிழக்கு-மேற்கு, திருப்பத்தூர் கிழக்கு-மேற்கு, கந்திலி தெற்கு ஒன்றியம் ஆகிய 5 ஒன்றியங்கள், **ஆலங்காயம் கிழக்கு, ஆலங்காயம் மத்திய, ஆலங்காயம் மேற்கு – திருப்பத்தூர் கிழக்கு, திருப்பத்தூர் வடக்கு, திருப்பத்தூர் மேற்கு, திருப்பத்தூர் தெற்கு, கந்திலி தெற்கு** ஆகிய 8 ஒன்றியக் கழகங்களாக பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களுக்கு கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுவதோடு;

வாணியம்பாடி, ஆம்பூர் ஆகிய இரண்டு நகரங்கள் **வாணியம்பாடி கிழக்கு, வாணியம்பாடி மேற்கு – ஆம்பூர் மேற்கு, ஆம்பூர் கிழக்கு** ஆகிய 4 நகரக் கழகங்களாக பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட நகரங்களுக்கு கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **ஆலங்காயம் கிழக்கு, ஆலங்காயம் மத்திய, ஆலங்காயம் மேற்கு – திருப்பத்தூர் கிழக்கு, திருப்பத்தூர் வடக்கு, திருப்பத்தூர் மேற்கு, திருப்பத்தூர் தெற்கு, கந்திலி தெற்கு** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் கொண்டதாகவும் - **வாணியம்பாடி கிழக்கு, வாணியம்பாடி மேற்கு – ஆம்பூர் மேற்கு, ஆம்பூர் கிழக்கு** ஆகிய நகரங்கள் பின்வரும் வார்டுகள் கொண்டதாகவும் அமையும்.

**ஆலங்காயம் கிழக்கு ஒன்றியம்:** 1. பீமகுளம், 2. மரிமாணிகுப்பம், 3.மிட்டூர், 4. பூங்குளம், 5. நரசிங்கபுரம், 6.பெரியகுரும்பத்தெரு, 7.நாய்க்கனூர், 8. ரெட்டியூர் ஆகிய 8 ஊராட்சிகள்.

**ஆலங்காயம் மத்திய ஒன்றியம் :** 1. வெள்ளக்குட்டை, 2.பெத்தவேப்பம்பட்டு, 3. கோவிந்தாபுரம், 4. தேவஸ்தானம், 5.ஜாப்ராபாத், 6. கொத்தக்கோட்டை, 7. விஜிலாபுரம், 8.நெக்னாமலை (பகுதி) பாகம்-1), 9.நிம்மியம்பட்டு, 10.வளையாம்பட்டு, 11. வள்ளிப்பட்டு, 12.ஈச்சங்கால் ஆகிய 12 ஊராட்சிகள் மற்றும் ஆலங்காயம் பேரூர்.

**ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் :** 1. வெலதிகமானிபெண்டா, 2.இளையநகரம், 3. கிரிசமுத்திரம், 4. சம்மந்திக்குப்பம், 5.கொல்லகுப்பம், 6. மதனாஞ்சேரி, 7. பள்ளிப்பட்டு, 8.நெக்னாமலை (புருஷோத்தகுப்பம்) ஆகிய 8 ஊராட்சிகள்.

**திருப்பத்தூர் கிழக்கு ஒன்றியம் :** 1. ஆண்டியப்பனூர், 2.இருணாப்பட்டு, 3. குரிசிலாப்பட்டு, 4. பள்ளவள்ளி, 5.பெருமாப்பட்டு ஆகிய 5 ஊராட்சிகள்.

**திருப்பத்தூர் வடக்கு ஒன்றியம் :** 1. அச்சமங்கலம், 2.மேல்அச்சமங்கலம், 3. கதிரிமங்கலம், 4. பூரிகமாணிமிட்டா, 5.அண்ணாண்டப்பட்டி, 6. கருப்பனூர், 7. பால்நாங்குப்பம், 8.வெங்காயப்பள்ளி ஆகிய 8 ஊராட்சிகள்.

**திருப்பத்தூர் மேற்கு ஒன்றியம் :** 1. புதூர்நாடு, 2. அகரம், 3.கதிரம்பட்டி, 4. செலந்தம்பள்ளி, 5. டி.கிருஷ்ணாபுரம், 6.மாடப்பள்ளி, 7. புதுக்கோட்டை, 8. நெல்லிவாசல்நாடு, 9.புங்கம்பட்டுநாடு, 10. சின்னசமுத்திரம், 11. குரும்பகேரி ஆகிய 11 ஊராட்சிகள்.

**திருப்பத்தூர் தெற்கு ஒன்றியம் :** 1. ஜம்மணபுதூர், 2. மோட்டூர்.ஏ.கே., 3. திம்மணாமுத்தூர், 4. பொம்மிகுப்பம், 5.தாதனவலசை, 6.காக்கணாம்பாளையம், 7. கொடுமாம்பள்ளி, 8. அனேரி, 9.இராச்சமங்கலம், 10. சௌடேகுப்பம் ஆகிய 10 ஊராட்சிகள்.

**கந்திலி தெற்கு ஒன்றியம்:** 1. சின்னகந்திலி, 2. கெஜல்நாயக்கன்பட்டி, 3. கந்திலி, 4. மண்டலநாயனகுண்டா, 5. பெரியகரம், 6. தோக்கியம் ஆகிய 6 ஊராட்சிகள்.

### ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **ஆலங்காயம் கிழக்கு, ஆலங்காயம் மத்திய, ஆலங்காயம் மேற்கு – திருப்பத்தூர் கிழக்கு, திருப்பத்தூர் வடக்கு, திருப்பத்தூர் மேற்கு, திருப்பத்தூர் தெற்கு, கந்திலி தெற்கு** ஆகிய ஒன்றியங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**ஆலங்காயம் கிழக்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **எஸ். தாமோதரன்,** திருப்பத்தூர் மாவட்டம்.

**ஆலங்காயம் மத்திய ஒன்றியம்:** பொறுப்பாளர் : **வி.ஜி. அன்பு,** திருப்பத்தூர் மாவட்டம்.

**ஆலங்காயம் மேற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **வி. ஞானவேலன்,** திருப்பத்தூர் மாவட்டம்.

**திருப்பத்தூர் கிழக்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **கே.ஆர். திருப்பதி,** திருப்பத்தூர் மாவட்டம்.

**திருப்பத்தூர் வடக்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **ஏ.சி. சுரேஷ்குமார்,** திருப்பத்தூர் மாவட்டம்.

**திருப்பத்தூர் மேற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **ஏ. நல்லதம்பி**, திருப்பத்தூர் மாவட்டம்.

**திருப்பத்தூர் தெற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **எம்.இராஜேந்திரன்**, திருப்பத்தூர் மாவட்டம்.

**கந்திலி தெற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **எஸ்.கே.டி. அசோக்குமார்**, திருப்பத்தூர் மாவட்டம்.

**வாணியம்பாடி கிழக்கு நகரம் :** 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 35, 36 ஆகிய 20 வார்டுகள்.

**வாணியம்பாடி மேற்கு நகரம் :** 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34 ஆகிய 16 வார்டுகள்.

**ஆம்பூர் மேற்கு நகரம் :** 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18 ஆகிய 18 வார்டுகள்.

**ஆம்பூர் கிழக்கு நகரம்** : 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36 ஆகிய 18 வார்டுகள்.

### நகரக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **வாணியம்பாடி கிழக்கு, வாணியம்பாடி மேற்கு, ஆம்பூர் மேற்கு, ஆம்பூர் கிழக்கு** ஆகிய நகரங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, நகரக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**வாணியம்பாடி கிழக்கு நகரம்:** பொறுப்பாளர் : **வி.எஸ்.சாரதி,** வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்.

**வாணியம்பாடி மேற்கு நகரம்:** பொறுப்பாளர் : **கயாஸ் அகமது,** வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்.

**ஆம்பூர் மேற்கு நகரம்:** பொறுப்பாளர் : **எம்.ஆர். ஆறுமுகம்,** ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம்.

**ஆம்பூர் கிழக்கு நகரம்:** பொறுப்பாளர் : **சபீர் அகமது,** ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 14.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## ஜெர்மனியில் நடைபெற உள்ள பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான போட்டிகளில் பங்கேற்கும்

# வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.32.25 இலட்சத்திற்கான காசோலைகள்! ரூ.4.80 இலட்சத்தில் நவீன விளையாட்டு உபகரணங்கள்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மே 15-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து ஜெர்மனியில் நடைபெற உள்ள பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான போட்டிகளில் கலந்து கொள்ள 12 வீரர், வீராங்கனைகளுக்கு 32.25 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் 9 வீரர், வீராங்கனைகளுக்கு 4.80 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நவீன விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டினை விளையாட்டில் முன்னோடி மாநிலமாக உருவாக்கிட தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையை ஏற்படுத்தி, விளையாட்டு வீரர், வீராங்கனைகள் வெளிநாடுகளில் நடைபெறும் விளையாட்டு போட்டிகளில் கலந்துகொள்ள செல்வதற்கான தங்குமிட கட்டணம், விமான கட்டணம், உணவு, அனுமதிக்கட்டணம் உள்ளிட்ட செலவுகளை மேற்கொள்ள நிதியுதவி வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். மேலும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பயன்படுத்த விளையாட்டு உபகரணங்களும் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் நிதியுதவி மூலம் வழங்கப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஜெர்மனியில் 16.7.2025 முதல் 27.7.2025 வரை நடைபெறவிருக்கும் உலக அளவில் பல்கலைகழகங்களுக்கு இடையேயான FISU விளையாட்டு போட்டியில் பங்கேற்கவுள்ள தமிழ்நாட்டை சேர்ந்த தடகள வீராங்கனை செல்வி ஏன்ஜெல் சில்வியா, வீரர்கள் செல்வன் ஜெரோம், செல்வன் அஸ்வின் கிருஷ்ணன், செல்வன் ரீகன், கூடைப் பந்து வீரர் செல்வன் சங்கீத் குமார், வீராங்கனை செல்வி தேஜஸ்ரீ, செல்வன் சுகந்தன், கையுந்து பந்து வீராங்கனைகள் செல்வி ஆனந்தி, செல்வி சுஜி, செல்வி கனிமொழி, வீரர் செல்வன் அபிதன், வாள்வீச்சு வீராங்கனை செல்வி கனகலக்ஷ்மி என 12 வீரர், வீராங்கனைகளுக்கு செலவினத்தொகையாக மொத்தம் 32.25 இலட்சம் ரூபாய்கான காசோலைகளை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து நேற்று (14.5.2025) வழங்கினார்.

மேலும் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து நீச்சல் வீராங்கனை செல்வி ஸ்ரீ காமினி, இறகுப்பந்து வீராங்கனை செல்வி ஜனாக்ஷி, தடகள வீரர் செல்வன் வாசன், செல்வன் யுகேந்திரன், வீராங்கனைகள் செல்வி ஸ்வேதா, செல்வி ஸ்ரீரேஷ்மா, கேரம் வீராங்கனைகள் செல்வி ஹரினி, செல்வி காவியா என 9 வீரர், வீராங்கனைகளுக்கு மொத்தம் 4.80 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நவீன விளையாட்டு உபகரணங்களை துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் ஒன்றியம், நகர, பேரூர் கழக நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

## செயலாளர் டாக்டர் அ.சுபேர் கான் அறிவிப்பு!

கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், கழக இளைஞரணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவில் ஒன்றியம், நகரம், பேரூர் கழகம் உள்ளிட்ட அமைப்புகளில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நிர்வாகிகள் அறிமுகக்கூட்டம், மாவட்டக் கழகச் செயலாளர் மற்றும் ஒன்றிய - நகர பேரூர் கழகச் செயலாளர்கள் முன்னிலையில் நடைபெறவுள்ளது. எனவே புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் இக்கூட்டதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அறிமுகக் கூட்ட விவரம்.

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 16.05.2025 வெள்ளிக்கிழமை | காலை 9:00 மணி | விருதுநகர் வடக்கு மாவட்டம். | இராஜாமணி அம்மாள் திருமண மண்டபம் - மல்லாங்கிணறு. |
| | மாலை 4:00 மணி | தென்காசி வடக்கு மற்றும் தென்காசி தெற்கு மாவட்டம். | தென்காசி தெற்கு மாவட்ட கழக அலுவலகம். கலைஞர் அரங்கம். சிவந்திநகர். குத்துக்கல் வலசை. தென்காசி. |

**டாக்டர் அ.சுபேர்கான்**
செயலாளர் - கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## புலவர் ஆடலரசு
## மே 15 (2007)



**பொதுக்கூட்ட மேடைகளைப் பட்டிமன்றமாக – கவியரங்கமாக – வழக்காடு மன்றமாக மாற்றி பல்வேறு கோணங்களில் கழக கொள்கைகளை நாட்டு மக்கள் ஏற்கும் வண்ணம் நகரங்களிலும், குறிப்பாக கிராம.ப்புறங்களிலும் ஆற்றலோடு உரையாற்றியவர்.**

**கழகக் கொள்கைகளைப் பரப்பும் முகத்தான் "தியாகம்" எனும் தலைப்பில் நாடகம் இயற்றி தாமே அதில் நடித்தவர்.**

**கழகம் நடத்திய போராட்டத்தில் ஈடுபட்டு காவல்துறையால் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**1997ஆம் ஆண்டு கழகம் நடத்திய முப்பெரும்விழாவில் தலைமைக் கழகச் சார்பில், தலைவர் கலைஞர் அவர்கள் இவருக்கு "கலைஞர் விருது" வழங்கி சிறப்பித்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**